**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-105/2022**

**List of Witness LW 1 Examined as PW4 (Complainant )**

| | | | |
|---|---|---|---|
| Name | திருநாவுக்கரசு | Age: | 34 |
| Father's name | ராஜாங்கம் | Calling: | இரண்டாம் நிலை காவலர், ரெகுநாதபுரம் காவல் நிலையம் |
| Village | கண்ணுகுடிப்பட்டி | | |
| Taluk | கந்தர்வகோட்டை | | |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.07.2025

(1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. அவர்கள் சார்பில் பிரிவு 355 (1) BNS -ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

முதல் விசாரணை

1) நான் தற்போது ரெகுநாதபுரம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.10.2022 ஆம் தேதி ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணி புரிந்த போது, அயல் பணியாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் பணி புரிந்தேன். அன்றைய தினம் மாலை சுமார் 06.00 மணியளவில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் சோலை என்பவரும் மாலை ரோந்து பணிக்காக காவல் நிலையத்தில் இருந்து, கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையம் சென்றோம். பேருந்து நிலையத்தில், பேருந்துகள் நுழையும் இடத்தில், ஒரு இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்து அங்கு நிறுத்தினார்கள். அந்த வாகனத்தின் பதிவு எண் TN 55 BK 4438 ஹோண்டா ஆக்டிவா ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் அந்த நபரிகளிடம் ஏன் வண்டியை இடையூறாக நிறுத்துகிறீர்கள், ஓரமாக நிறுத்துங்கள் என்று சொன்னார். அப்போது அந்த 3 நபர்களில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட ஜெகன் என்பவர் சிறப்பு உதவியாளாரை பார்த்து, போலிஸ்னா பெரிய ஆளு புண்டையா, நீங்க சொன்னா நான் ஓரமா நிப்பாட்டனுமா, தேவுடியா பயலுகளா என்று சொன்னார். நான் ஏன் அவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு நீ என்ன ஆளு புண்டையா என்று என்னை பார்த்து மேற்படி ஜெகன் என்பவர் திட்டினார்.

2) பின்னர் மேற்படி ஜெகன் எனது சட்டையை பிடித்து இழுத்தார், அந்த நபர்களில் மற்றொரு நபரான பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட சுப்பிரமணியன் என்பவர் என்னை அடிக்க வந்தார். அப்போது அருகில் டீ குடித்து கொண்டிருந்த தங்கதுரை, தவச்செல்வம், சின்னக்கவுண்டர் என்பர் வந்தவுடன் அவர்கள் விலகிவிட்டு, போலிஸை ஏதாவது செய்தால் தான் அடங்குவார்கள் என்று சொல்லி என்னை பணி செய்யவிடாமல் தடுத்தார்கள். பின்னர் மூவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். அதன்பிறகு காவல் ஆய்வாளரிடம் மேற்படி சம்பவம் குறித்து புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். (மேற்படி புகார் மனு அ.சா.**ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)**

**3)** அந்த நபர்கள் குடிபோதையில் இருந்ததால், காவல் ஆய்வாளர் அவர்களை பிடித்து மருத்துவ பரிசோதனை செய்வதற்காக அனுப்பி வைத்தார். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி 3 நபர்களை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலுமா என்றால் அடையாளம் காட்ட இயலும். (எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்பதால் சாட்சியாக அவர்களை அடையாளம் காட்ட இயலவில்லை, ஆஜரில் இருந்திருந்தால் அடையாளம் காட்டியிருப்பார்.)

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்**5**டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.என். சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.